செய்தி வெளியீடு எண் : 306 நாள் : 14.02.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 18.02.2023 அன்று நடைபெற உள்ள இந்தியா மற்றும் நேபாளம் அணிகளுக்கான நட்பு ரீதியிலான சர்வதேச மகளிர் கால்பந்துப் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.**

அகில இந்திய கால்பந்து சம்மேளனம், தமிழ்நாடு கால்பந்து கழகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகியவை இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் கால்பந்துப் போட்டி 15.02.2023 மற்றும் 18.02.2023 ஆகிய நாட்களில் மாலை 6:30 மணிக்கு ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற உள்ளது.

நட்பு ரீதியிலான இப்போட்டியில் இந்தியா மற்றும் நேபாளம் அணிகள் விளையாடுகின்றன. இந்தப் போட்டியில் இந்திய அணியில் தமிழ்நாட்டின் சார்பில் கடலூரைச் சார்ந்த சந்தியா மற்றும் இந்துமதி, சேலத்தைச் சார்ந்த சௌமியா, கார்த்திகா ஆகிய 4 வீராங்கனைகள் விளையாடுகின்றனர்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.02.2023 அன்று நடைபெறுகின்ற சர்வதேச மகளிர் கால்பந்துப் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத்துறையின் மீது அதிக அக்கறை கொண்டு, அனைத்து விளையாட்டுகளிலும் தனிக்கவனம் செலுத்தி, விளையாட்டு என்றாலே தமிழ்நாடு தான் முதன்மை என்ற நிலைக்கு கொண்டு வர பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற நிலையில், இதுபோன்ற சர்வதேச கால்பந்துப் போட்டி 15 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ்நாட்டில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in